# ஒன்ட்டேரியோ அரசாங்கமானது மாகாண அளவிலான மூன்றாவது அவசர நிலையை பிரகடனம் செய்கிறது

*ஏப்ரல் 8 முதல் வீட்டிலேயே இருக்கவும் எனும் மாகாணம் தழுவிய ஆணை*

ப்ராம்ப்ட்டன், ON (ஏப்ரல் 7, 2021) – இன்றைய தினம், ஒன்ட்டேரியோ அரசாங்கமானது அவசர நிலை மேலாண்மை மற்றும் பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் [Emergency Management and Civil Protection Act (EMCPA) கீழாக, ஏப்ரல் 8 ஆகிய இன்று முதல், மூன்றாவது அவசரநிலையை உடனடியாக பிரகடனம் செய்து, வீட்டிலேயே இருக்கவும் எனும் மாகாண அளவிலான ஆணையையும் அறிவிக்கிறது.

இந்த வீட்டிலேயே இருக்கவும் எனும் ஆணையானது ஒவ்வொருவரும் தங்கள் வீட்டிலேயே இருந்துகொள்ள வேண்டும் என ஆணையிடுகிறது; இதில் மளிகைக்கடைக்கு, மருந்துக்கடைக்கு, உடல்நலப் பராமரிப்பு சேவைகள் பெறச்செல்வது, உடற்பயிற்சி மற்றும் அத்தியாவசிய வேலைகள் போன்றவற்றுக்கு செல்ல தடையில்லை.

இந்த ஆணை, மற்றும் பிற புதிய அல்லது ஏற்கெனவே இருக்கின்ற பொதுமக்கள் சுகாதார கட்டுப்பாடுகள் அனைத்தும், ஒவ்வொரு வீட்டாரும் தமது நடமாட்டத்தையும் மற்றும் தனக்கு அடுத்து இருப்பவர்களுடன் தினசரி கொள்ளும் தொடர்புகளையும் குறைத்துக்கொள்வதை இலக்காக கொண்டதாகும். அத்தியாவசிய தேவைகளுக்காக வெளியில் செல்வதைக் குறைப்பதுடன், தங்கள் பணியாளர்கள் வீட்டிலிருந்தபடியே பணியாற்ற முடியும் என்பவர்களை அவரவர் வீட்டில் இருந்தே பணியாற்றுவதை தொழில் நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும்.

**சில்லறை விற்பனை**

இத்துடன் கூடுதலாக, மாகாணம் தழுவிய அவசர நிலை தடையின் கீழாக, அத்தியாவசியம் அல்லாத சில்லறை விற்பனைகளுக்கான பணியிட பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பொது மக்கள் சுகாதாரம் ஆகியவற்றை மாகாண நிர்வாகம் வலுப்படுத்துகிறது. இந்த நடவடிக்கைகளில் அடங்குபவை, ஆனாலும் இவை மட்டுமே கிடையாது:

- பெரும்பாலான சில்லறை விற்பனைக்கடைகளில் போகிறபோக்கில் எட்ட இருந்து சேகரித்துக் கொள்ளும் வகையில், அவரவர் இடத்திற்கே பொருட்களைசேர்ப்பிக்கும் வகையில் மட்டுமே, மற்றும் முன் பதிவின் பேரில் மட்டுமே வியாபாரத்தை கட்டுப்படுத்துதல்; இதன்படி காலை 7 மணி முதல் மாலை 8 மணி வரை இயங்கலாம் மற்றும் சரக்குகளை வாடிக்கையாளர்களுக்கு கொண்டு சேர்ப்பித்தலை காலை 6 மணி முதல் மாலை 9 மணி வரைசெய்யலாம். மற்றும் இதர கட்டுப்பாடுகளும் உண்டு;
- போகிறபோக்கில் எட்ட இருந்து பொருட்களை எடுத்துச் செல்லுதல் மற்றும் சேர்ப்பித்தல், முன் பதிந்த சந்திப்பு, ஷாப்பிங் மால்-க்குள்ளாக ஒரே ஒரு நியமனம் செய்யப்பட்ட அமைவிடம்

கொண்டிருத்தல் மற்றும் மால் – க்கு வெளியிலாக எத்தனை எண்ணிக்கையிலுமான நியமனம் செய்யப்பட்ட அமைவிடம் கொண்டிருத்தல் மற்றும் இதர கட்டுப்பாடுகள் உள்பட, ஷாப்பிங் மால் - களுக்குள் குறைவான குறிப்பிட்ட சில நோக்கங்களுக்கு மட்டுமேயான அணுகலைக் கொண்டிருத்தல்

- மளிகைப் பொருட்களுக்கான தள்ளுபடி மற்றும் பிக் பாக்ஸ் கடைகளில் சில்லறை விற்பனை, செல்லப்பிராணிகளுக்கான பொருட்கள், வீட்டுபயோக சுத்தப்படும் பொருட்கள், மருந்தாளுமைப்பொருட்கள், உடல்நலப் பராமரிப்புப் பொருட்கள் மற்றும் தனி நபர் சுய பராமரிப்பு பொருட்கள் ஆகியவற்றில் நேரடி பரிவர்த்தனையை கட்டுப்படுத்தல்
- பின் வரும் கடைகளில் முன் பதிந்த சந்திப்பு மூலமாக மட்டுமே நேரடியாக நபர்கள் வந்து இயங்குவதற்கு அனுமதித்தல், மற்றும் இதில் 25 சதவீத அளவுக்கு மட்டுமே நபர்களை அனுமதித்தல் மற்றும் அனுமதிக்கப்படும் நேரங்களை காலை 7 மணி முதல் 8 மணி வரை என்று கட்டுப்படுத்தல்; இதில் சரக்குகளை வாடிக்கையாளர்களுக்கு கொண்டு சேர்ப்பிக்கும் நேரமானது காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை அனுமதிக்கப்படுகிறது:
    - பாதுகாப்பு பொருட்களுக்கான கடைகள்;
    - தனி நபர்களுக்கு உதவி புரியும் வகையிலான சாதனங்கள், உதவிப் பொருட்கள், நடமாடுவதற்கு உதவும் கருவிகள் அதற்கான உபகரணங்கள் அல்லது மருத்துவ சாதனங்கள் அதற்கான உபகரணங்களை பிரதானமாக விற்கின்ற, வாடகைக்கு விடுகின்ற, பழுது பார்க்கின்ற தொழில்கள்;
    - வர்த்தக ரீதியிலான வாகனம் சார்ந்த மற்றும் இலகுரக இயந்திரவகைகள் மற்றும் உபகரணங்களை வாடகைக்கு விடுதல், குத்தகைக்கு விடுதல்;
    - பொது மக்களுக்கு மருத்துவரின் பரிந்துரைச்சீட்டின் பேரில் கண் சார்ந்த அணிகலன்களை விற்கின்ற கண் கண்ணாடி கடைகள்;
    - மோட்டார் வாகனங்கள், படகுகள் மற்றும் நீரில் செல்லும் வாகனங்கள் விற்கும் வியாபாரங்கள்;
    - வாகனம் மற்றும் உபகரணம் பழுது பார்த்தல் மற்றும் அத்தியாவசிய பராமரிப்பு மற்றும் வாகனம் மற்றும் உபகரணம் வாடகைக்கு விடுதல் ; மற்றும்
    - தொலைத்தகவல் தொடர்பு சேவை அளிப்பவருக்காக, சில்லறை விற்பனையில் சேவை அளிப்பவர்; இதில் பொதுமக்கள் ஒரு செல்ஃபோன் - ஐ வாங்கவோ அல்லது பழுது பார்க்கவோ அல்லது தொழில்நுணுக்க உதவி பெறவோ மட்டுமே கடைகளுக்குள் நுழையலாம்.
- திறந்த வெளி தோட்டப்பொருள் மையங்கள் மற்றும் நாற்றுக்கள் விற்கும் இடங்கள், மற்றும் உள்ளரங்க பசுமை இல்லங்களில் பொதுமக்களுக்கான விற்பனைக்கு 25 சதவீதம் பேர்களை மட்டுமே நுழைய அனுமதிக்க வேண்டும்; பணிநேரமானது காலை 7 மணி முதல் மாலை 8 மணி வரை மட்டுமே என கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது.

மூன்றாவது மாகாணம் தழுவிய அவசர நிலை பற்றி இங்கே படிக்கவும்.

**நகரின் சேவைகள் மற்றும் வசதி அமைப்புகள்**

**சிட்டி ஹால் மற்றும் பெருநிறுவன வசதியமைப்புக்கள்**
சிட்டி ஹால் மற்றும் பெருநிறுவன வசதியமைப்புக்கள் தனி நபர் சேவைகளுக்கான முன்பதிவின் பேரில் மட்டுமே திறந்திருக்கும். போகிறபோக்கில் நுழைவதற்கு அனுமதியில்லை. முன்பதிவு செய்வதற்கு இங்கு வருகை தரவும்: www.brampton.ca/skiptheline.

**நகரின் பொழுதுபோக்கு மையங்கள் மற்றும் வசதிகள்**
ப்ராம்ப்ட்டன் நகரின் அனைத்து பொழுதுபோக்கு வசதி கட்டிடங்களும் பொதுமக்கள் நுழைய முடியாதபடி மூடப்பட்டிருக்கும் மற்றும் உள்ளரங்க நிகழ்ச்சிகள் யாவும் அடுத்த அறிவிப்பு வரும் வரை இடை நிறுத்தப்படுகின்றன.

***மெய்நிகர் நிகழ்ச்சிகள்***

மெய்நிகர் உடற்பொருத்தம்

உடலைக் கச்சிதமாக வைத்துகொள்வதற்காக, பயிற்சி பெற்ற பயிற்றுவிப்பாளர்களுடன், இணைந்து 30 நிமிட நேர இலவச மெய்நிகர் உடற்பயிற்சி வகுப்புகளில் சேர குடியிருப்புவாசிகள் அழைக்கப்படுகின்றனர்.

55+ பயிற்சிப் பட்டறைகள்

55 வயதுக்கும் கூடுதலான ப்ராம்ப்ட்டன் நகர வாசிகள் தங்கள் வீட்டின் சவுகரியத்தில் இருந்தபடியே இலவச மெய்நிகர் பயிற்சிப் பட்டறைகளுக்கு பதிவு செய்து கொள்ளலாம். பங்கேற்பாளர்கள் பாதுகாப்பான கட்டமைக்கப்பட்ட இடத்தில் இருந்தபடியே ஆன்லைனின் இணைந்து புதிய நட்புக்களை ஏற்படுத்திக்கொள்ளலாம் மற்றும் சமூகத்தினருடன் பழகலாம் .

அனைவரையும் உள் சேர்க்கும் வகையிலான மெய்நிகர் செயல்பாடுகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள்

இந்த தொடரானது, இயலாமை கொண்ட, விதிவிலக்கான பங்கேற்பாளர்கள் செயல்பாடுகளில் சேர்ந்து, புதிய ஏதாவது விஷயத்தைக் கற்றுக்கொண்டு, சகாக்களுடன் நீடித்த நட்பை வளர்க்கலாம்.

மெய்நிகர் நிகழ்ச்சிகள் வழங்குதல், மற்றும் அவற்றுக்கு பதிவு செய்வது எப்படி என்பது உள்ளிட்ட மேலும் தகவல்களை இங்கு காணலாம்: www.brampton.ca/recreation.

***வீட்டில் பொழுதுபோக்கு***

சுயமாக வழிக்காட்டிக்கொள்ளும்படியான கலைகள் மற்றும் கைவினைப்பொருட்களைச் செய்தல் பற்றிய பயிற்சி வகுப்புகள் ஆகியவற்றை கற்றுக்கொண்டு வீட்டிலேயே செயலூக்கமாக இருக்கவும்: இந்த பயிற்சிகள் 24/7 என்ற முறையில் கிடைக்கின்றன! காகிதங்களில் உருவம்/வடிவம் செய்தல் எப்படி என கற்றுக்கொள்ளுங்கள்; உங்கள் கையெழுத்தை மேம்படுத்த பயிற்சி செய்யுங்கள் அவற்றுக்கான பல தரப்பட்ட வகைகளை தெரிந்து கொள்ள இங்கு அணுகவும், இவை ப்ராம்ப்ட்டன் ரிக்ரியெஷன் அமைப்பினால் பாசத்துடன் செய்யப்பட்டவையாகும்.

The Corporation of The City of Brampton
2 Wellington Street West, Brampton, ON L6Y 4R2 311 TTY: 905.874.2130

**முகத்திரைகள் அணிவதன் கட்டாயம்**

முகத்திரைகள் அணிதல் கட்டாயம் எனும் உப சட்டத்தின் கீழாக, ப்ராம்ப்ட்டன் நகரின் அனைத்து கட்டிடங்களின் உட்புறங்களிலும் மருத்துவம் அல்லாத முகக் கவசங்கள் அல்லது முகத்திரைகளை அணிவது அவசியமாகும். பொது நிறுவன அமைப்புக்கள் மற்றும் தொழில் அமைப்புக்கள் யாவும் தங்கள் உள்புற பணியிடங்களில் முகக் கவசங்கள் அல்லது முகத்திரைகளை அணிவதை கட்டாயப்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

இந்த உபசட்டமானது, மருத்துவ காரணங்களுக்காக முகத்திரை அல்லது முகக் கவசம் அணிய முடியாத இந்த சில தனி நபர்கள் உள்ளிட்டவர்களுக்கு விலக்கு அளிக்கிறது; இரண்டுக்கும் குறைவான வயதுடைய குழந்தைகள்; அவசர ஆணைகளின் கீழாக விளையாட்டு செயல்பாடுகளில் ஈடுபடுபவர்கள். மேலும் தகவல்களுக்கு இங்கு வருகை புரியவும்.: www.brampton.ca/masks.

மேலும் தகவல்களுக்காகவும், சேவை பெறும் வேண்டுகோள்களுக்காகவும், குடியிருப்புவாசிகள் மற்றும் தொழில் அமைப்புகள் 311 என்ற எண்ணை அழைக்கலாம், visit www.311brampton.ca க்கு வருகை தரலாம் அல்லது 311 மொபைல் செயலியை உபயோகிக்கலாம்.

**லின்குகள்**

இவை பற்றி மேலும் தெரிந்து கொள்ளவும்:

- ப்ராம்ப்ட்டன் நகர கோவிட்-19 நிகழ்ச்சி அமைப்பு மற்றும் சேவைகள் பற்றிய புது தகவல்கள் (City of Brampton COVID-19 programming and service updates)
- ப்ராம்ப்ட்டன் நகரம் – என்னவெல்லாம் திறந்திருக்கும் , என்னவெல்லாம் மூடப்பட்டிருக்கும் (City of Brampton – what's open, what's closed)
- கோவிட்-19 அடையாளங்கள் (COVID-19 Symptoms)
- ப்ராம்ப்ட்டன் நகரில் சோதித்துக் கொள்ளுதல் (Testing in Brampton)
- தனக்குத்தானே எப்படி தனிமைப்படுத்திக் கொள்ளுதல் (How to self-isolate)
- கோவிட்-19 தொற்று பரவல் சமயத்தில் தொழிலகங்கள் மற்றும் பணியிடங்களை பாதுகாப்பாக வைத்தல் (Keeping businesses and workplaces safe during COVID-19)
- பீல் பிராந்தியத்தில் கோவிட்-19 தொற்று நோயாளிகள் (Cases of COVID-19 in Peel)

-30-

**ஊடகத் தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமூக ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca